**“நான் ஆண்டவரின் அடிமை உமதுசொற்படியே எனக்கு நிகழட்டும்’’** என்ற மரியாளின் அர்ப்பண வாழ்வு இறைவனுக்கு ஏற்றதாக இருந்தது. இம்மாதம் மரியாளின் வணக்கமாதம். மரியாளுக்காக ஒதுக்கப்பட் மாதமாகவும் இருக்கிறது. செபமாலை மாதாவின் பெருநாளையும் இம்மாதம் 7ம் திகதி கொண்டாடுகின்றோம். 5ம் நூற்றாண்டு காலத்திலேயே மேற்கத்தைய திருஅவையில் மரியாளின் பக்திமுயற்சிகள், செபமாலை ஓதுதல் முதன்னையான இடத்தைப் பெற்றிருந்தது. ஒக்டோபர் 7ம் திகதி லெபான்றோவுக்கு அருகில் கிறிஸ்தவர்கள் துருக்கியருக்கெதிராக பெரும் வெற்றியைப் பெற்றனர். அதன் நினைவாகத்தான் இந்நாளைக் கொண்டாடுகின்றார்கள். திரும்பத் திரும்ப ஒரே வார்த்தைகளை சொல்லிக் கொண்டிருப்பது பயன் அற்றது என பல எண்ணப்பாடுகளாக அக்காலத்தில் இருந்தாலும் இதற்கான சிறப்பான விளக்கத்தை அன்றைய நாளில் பணியாற்றிய பாப்பரசர் 12ம் பத்தினாதர் கொடுத்திருக்கிறார்.

அதாவது “திரும்பத் திரும்ப அருள் நிறைந்த மந்திரத்தை சொல்லுகின்ற போது நமது சிந்தனையெல்லாம் இயேசுவின் வாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற பாஸ்கா மறைபொருளை பற்றி தியானிப்பதாகவும், இதை எமது வாழ்வில் இரண்டரக் கலந்ததாகவும், மீட்பின் பலாபலன்களை எமக்குத் தருவதாகவும் இருக்கிறது. என்று விளக்கம் கொடுக்கிறார். செபமாலைப் பக்தியின் பாப்பரசர் என்று அழைக்கப்படும் 13ம் சிங்கராயர் செபமாலை பக்தி முயற்சியைப் பற்றி கூறும் போது தாய் பிள்ளை உறவு சிறப்பாக போற்றப்படுவதற்கும், மரியன்னையின் அரவணைப்பில் நாம் இருக்கிறோம் என்ற உணர்வையும் சிறந்த செபமாலைத் தியானம் எமக்கு உணர்த்துகிண்றது. லூயிஸ் பாஸ்டர் என்பவர் விஞ்ஞான மருத்துவ உலகத்தில் மிகவும் முக்கியமானவர். இவருடைய வாழக்கையில் இடம் பெற்ற முக்கியமான அனுபவத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ளலாம் என எண்ணுகிறேன். புகையிரதம் ஒன்றில் லூயிஸ் பாஸ்டர் பயணித்துக் கொண்டிருக்கும் போது பல்கலைக்கழக மாணவர்கள் இவர் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு இவரை நையாண்டி பண்ணி, கேலிசெய்து கொண்டிருந்தார்கள்.

அதாவது இந்த நேரத்தில் கையில் செபமாலைவைத்து செபித்துக் கொண்டிருக்கிறீர். எம்மோடு வந்து ஆடி, கூத்தாடவாரும் என்று கேலி பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவரோ தொடர்ந்து செபமாலைத் தியானத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அவர்களின் ஒருவர் நீர் யார்? உமது பெயர் என்ன? என்று கேட்டார். லூயிஸ் பாஸ்டர் அதற்கு மௌனமாக தன்னிடம் இருந்த அறிமுக அட்டையை காட்டினார் அதில் லூயிஸ் பாஸ்டர் ஒரு விஞ்ஞானி, ஆராட்சியாளர், அறிவில் ஆராட்சிமையம் என்று எழுதப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட உயர்ந்த மனிதன் அதிகூடிய நம்பிக்கை இயேசுவிலேயும், மரியாளிலேயும் வைத்திருக்கிறார் எண்ணி எல்லோரும் மன்னிப்புக் கேட்டார்கள். இப்படியான சம்பவங்களினூடாக செபமாலையின் மகத்துவத்தை உணரமுடிகிறது. எனவே இம் மாதத்தில் செபமாலை சொல்லுவாம், மரியாளை மகிமைப்படுத்துவோம், இறைவார்த்தையின்படி வாழ்வோம்

அருட்பணி யூட் நிக்ஸன்
Parish Priest ,
Our Lady of Deliverance Tamil Catholic Mission